தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 12 அக்டோபர் 2012 கனி 11

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Oct. 2012

To

சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்
1கொரிந்தியர் 6:13

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

Our Radio & TV Programs
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

- ஒலிவ மரம் ஆசியா மைனர் மற்றும் தென் ஐரோப்பாவை சொந்த இடமாகக் கொண்ட ஒரு சிறிய பசுமையான மரம்.
- இதனுடைய இலைகள் 6-8 செ.மீ நீளம் கொண்டவை.
- இதன் உயரம் 33 அடிக்குமேல் இராது.
- ஒலிவ மரம் பெலிஸ்திய நாட்டின் அருகில் எல்லா இடத்திலும் காணப்படுகிறது.
- இது சதைப்பிடிப்புள்ள முட்டைவடிவ பழத்தையும், அதிக எண்ணெய்யையும் கொடுக்கக்கூடியது.
- பவுல் காட்டொலிவ மரம் வெட்டப்பட்டு நல்ல ஒலிவமரத்தில் ஒட்டவைக்கப்பட்டதாகக் கூறுகிறார் (ரோமர் 11:17,24).




## சவுலின் மூன்று வகை பாவம்
## 3 Fold Sin of Saul

1. கர்த்தருடைய சொல்லைக் கேட்கவில்லை
2. கொள்ளையின்மேல் பறந்தான்
3. கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பானதைச் செய்தான்

**1சாமுவேல் 15:19**



"அதற்கு சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங் தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1சாமுவேல் 15:22)

**நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறீர்களா?**

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 146

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. எந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது?
2. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம் என்ற அப்போஸ்தலன் யார்?
3. தன் சகோதரிமேல் மோகங்கொண்ட சகோதரன் யார்?
4. உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றவன் யார்?
5. ஏழு நாள் ராஜாவாயிருந்து தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி அதிலே செத்தவன் யார்?
6. என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்றவன் யார்?
7. யோனாவின் தகப்பன் அமித்தாய் ஒரு தீர்க்கதரிசியா?
8. இயேசுவானவர் நாடோறும் எங்கே உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்?
9. வெகு புத்தியீனமாய்ச் செய்தேன் என்று அறிக்கையிடும் ராஜா யார்?
10. ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றவர்கள் யார்?



## சவுல் நான்கு வழியில் கீழ்ப்படிதலை உரிமைபாராட்டினான்
## 4 Ways Saul Claimed Obedience

1. கர்த்தருடைய சொல்லைக்கேட்டேன்.
2. கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்போனேன்
3. அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டுவந்தேன்.
4. அமலேக்கியரைச் சங்காரம்பண்ணினேன்

**1சாமுவேல் 15:20**

"இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" - 1கொரிந்தியர் 10:12



**உங்களுடைய உரிமைபாராட்டுதல் இந்த சவுலைப்போன்றதா?**

சிறுவர் பகுதி

## பூமியிலிருந்து அகற்றவேண்டும்

**வேத பகுதி:அப்போஸ்தலர் 22:17–22**



**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள் சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைத் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன் படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்**

**“தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்”**
**(லூக்கா4:24)**



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 12 அக்டோபர் - 2012 கனி - 11

ஆசிரியருரை

## மேன்மைபாராட்டுதல்
## Commend



தங்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும், மற்றவர்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும், கர்த்தரைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும் நம்முடைய அநுதின ஜீவியத்தில் பார்க்கிறோம். **முதலாவது;** தங்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று தியானிக்கலாம். “தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல” என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (2கொ.10:12). உண்மைதான் இன்றைய நாட்களில் பெருமையானவைகளைப் பேசி தங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களை நாம் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பதை அறியாது பேசுகிறார்கள். மனிதன் மேன்மைபாராட்டுவதற்கு என்ன இருக்கிறது? அவன் நிர்வாணியாய் வந்தான் நிர்வாணியாய் போவான். அவன் பிரயாசப்பட்ட ஒன்றையும் எடுத்துக்கொண்டு போகான். இது எல்லோருக்கும் உள்ள நியதியாக இருக்கிறது. இப்படி இருந்தபோதும் மனிதனுடைய மேன்மைக்கு அளவே இல்லை.

பிசாசு பெருமையானவைகளைப் பேசுவான். அவன் ஆண்டவர் இயேசுவிடம், என்னைப் பணிந்துகொண்டால் இவைகள் எல்லாவற்றையும் உமக்குத் தருவேன் என்றான். அவனை கர்த்தர் பார்த்து அப்பாலே போ சாத்தானே என்றார். அவனைப்போல அநேகர் தங்களைக் குறித்து மேன்மையாக நினைத்துக்கொண்டு, அது வைத்திருக்கிறேன், இது வைத்திருக்கிறேன் எல்லாம் எனக்கு சொந்தமானது என்று பெருமையடித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த பூமியில் உள்ள ஒரு காரியத்தை மாற்றியமைக்க நமக்கு அதிகாரம் இல்லை. அப்படியிருக்கும்போது நம்மை நாமே உயர்த்துவதற்கு என்ன இருக்கிறது? கர்த்தர்

யோபைப் பார்த்து: “நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி” என்று கேட்டார் (யோபு 38:4). இதையெல்லாம் கேட்ட யோபு இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன் என்றான். அன்பானவர்களே தேவனுக்கு முன்பாக நாம் வாயைப்பொத்திக்கொண்டு நீதிமானாகிய யோபைப்போல அமைதலோடு இருக்கவேண்டும். ஆகையால் பவுல் சொல்வதைப்போல தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல. மேலும், “ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன்” என்று 1கொரி.3:18-ம் வசனத்தில் படிக்கிறோம். தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்கிறவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். அதாவது ஏமாற்றப்படுகிறார்கள். நான் ஞானமாய் செய்துவிட்டேன் என்பார்கள், நாளடைவில் தெரியவரும் அவர்களுடைய ஞானம் எப்படிப்பட்டதென்று. எல்லாம் வீணாய்போய்விடும்.

“கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை” நீதி.15:33. தன்னைத்தான் மேன்மையாக எண்ணாமல் கர்த்தருக்குப் பயப்படக்கூடிய பயத்தில் வளரும்போது, கர்த்தருடைய வசனம் நமக்கு ஞானத்தைப் போதிக்கும். அப்பொழுது நடக்கவேண்டிய வழியை கற்றுக்கொள்வோம். நாம் மேன்மையடையவேண்டுமானால் முதலாவது தன்னைத் தான் தாழ்த்தவேண்டும். தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான் என திருமறை நமக்குப்போதிக்கிறது. அநேகருடைய வாழ்க்கையில் தாழ்மை வருவதில்லை. ஆகையால் அவர்களுடைய மேன்மை அவர்களை வஞ்சிக்கிறது. “மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்” என நீதி.16:5-ல் படிக்கிறோம். மனமேட்டிமை கர்த்தருக்கு அருவருப்பானது. கர்த்தருக்கு அருவருப்பான ஒன்றை நாம் பிடித்துக்கொண்டிருக்கலாமா? கர்த்தருக்கு பிரியமானதை நாம் செய்யும்போது, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவோம். என்னுடைய பிறவியிலே வந்த பழக்கம் என்று அநேகர் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒருவருக்கும் தலை வணங்கமாட்டேன். என்னை யாரும் மதிக்காவிட்டால் அவர்களுடைய தலைவாசலையும் மிதிக்கமாட்டேன் என்று தங்களைக் குறித்து மேன்மையாக பேசிக்கொண்டு நாட்களை கழிக்கிறவர்களை காண்கிறோம். உன்னதத்தின் தேவகுமாரன் நம்மை மீட்கும்படியாக தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் சிலுவை பரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆகையால் பிதாவாகிய தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார் என காண்கிறோம். இன்று கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள். கர்த்தருடைய சமுகத்தில் உங்களை தாழ்த்தி அவரையும் அவருடைய



# திருச்சபை வரலாறு

-John S.Nathan
9444443378

<u>சபையின் முற்பிதாக்கள்</u>



Justin Martyr: ஜஸ்டின் மார்டியர் (கி.பி.100-167) இவர் (நியோபோலிஸ் பிறந்த பழைய ஷிசிம் Shechem: -மை சேர்ந்தவர். அன்பின் சீடர், யோவான் மரித்ததை நேரில் கண்டவர். தத்துவசாஸ்திரத்தை நன்கு கற்றவர். தன் வாலிப நாட்களில் அனேக கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சியாக மரித்ததை நேரில் கண்டதினால், தானும் இரத்தசாட்சியாய் மரிப்பதற்கு இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரின் சீடரானார். தத்துவ ஞானிகளின் உடையணிந்து, அனைவரும் கிறிஸ்துவை பின்பற்றிட பெரிதும் பாடுபட்டார். கிறிஸ்தவர்களுக்காக பரிந்து வேண்டி மன்னருக்கு மடல் எழுதியவர்.

அவர் அந்நாளில் சிறப்பும் செல்வாக்குமுடையவராய் வாழ்ந்தவர். ரோமில் இரத்தசாட்சியாய் மரித்தவர். அவர் வாழ்நாளிலே நகரங்கள் கிராமங்களில் கிறிஸ்தவர்களால் வாரத்தின் முதல் நாளில் தவறாமல் அப்பம் பிட்கும்படி ஒன்று கூடிடும்போது கர்த்தருடைய வார்த்தையை போதித்து, ஜெபம் செய்துவந்தனர். அன்று சபைக்கு வராதவிசுவாசிகளுக்கு அப்பமும், திராட்சைரசமும் அவர்களின் வீடுகளுக்கு எடுத்துச் சென்று அவர்களுக்கு உதவுவார்கள். செல்வந்தர்களும், மற்றவர்களும் தங்களின் கையின் பிரயாசத்தின்படி தங்களின் வருவாயிக்கு ஏற்ற காணிக்கைகளை மன உற்சாகத்தின்படி அளித்துவந்தனர். இக்காணிக்கை பணத்தினால் அநாதைகள், விதவைகள், கைதிகள், அன்னியர் மற்றும் தேவையானவர்களுக்கு உதவிட செலவு செய்யப்பட்டது. இதனையே இன்றும் கிறிஸ்துவின் சபையார் மட்டுமே தவறாமல் கைக்கொண்டு வருகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்துவோம். -தொடரும்









The 3rd World Evagelism Retreat
Kumily - Kerala

# எவ்வாறு ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்வது

# HOW TO ATTEND SUNDAY WORSHIP

*-Salvador Cariaga*

இந்த விஷயத்தில் நீங்கள் ஏற்கனவே வல்லுநராக இருப்பீர்கள், ஆனால் இவ்விஷயத்தில் அதிகப்படியான சில குறிப்புகள் உங்களுக்குத் தேவை, தயவுசெய்து சரியான முறையில் ஆராதிக்க நமக்கு உதவுகின்ற பின்வரும் தகவல்களை கவனியுங்கள்.

- **ஞாயிற்று கிழமையில் சீக்கிரமாய் படுக்கையைவிட்டு எழும்படி சனிக்கிழமை மாலை சீக்கிரமாக படுக்கைக்குச் செல்லுங்கள்.** நன்றாக ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். ஆராதனைக்கு தூங்கி வழிந்து கொண்டு செல்லாதீர்கள்.
- **சபைக் கூடுகைக்கு சீக்கிரமாக வாருங்கள்.** கடைசி நிமிடம் வரை காத்துக்கொண்டிராதீர்கள். உங்களுடைய வருகையை ஒழுங்குபடுத்துவதற்கும், வழிகாட்டுவதற்கும், ஏற்பாடுகள் செய்வதற்கும் இன்னும் இதுபோன்ற பல காரியங்களுக்கும் தேவையாயிருக்கிறது. நீங்கள் வழியில் செல்லுகின்ற புதியவரை நிறுத்தி அழைத்துவருகிறவராக இருக்கலாம்.
- **நீங்கள் உங்களுடைய வேதாகமம் பேனா பேப்பர் மற்றும் குறிப்பேடுகளையும் கொண்டுவாருங்கள்.** செய்திநேரத்தில் அல்லது வேதபாடநேரத்தில் குறிப்புகள் எடுத்து அவைகளை எதிர்கால நலனுக்காக நேர்த்தியாக வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள்.
- **ஊழியத்தில் பங்குகொள்ளுங்கள்.** பாடுங்கள், ஜெபியுங்கள் ஏற்றவேளையில் வினா எழுப்புங்கள், மேலும் ஏகசிந்தையுடன் ஒத்துக்கொள்ளும்போது இருதயத்தின் ஆழத்திலிருந்து ‘‘ஆமென்’’ என்று சொல்லுங்கள்.
- **விருந்தினர்களை சந்தியுங்கள்.** உங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் உங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள். அவர்கள் வேதத்தை அறியாதவர்களாக இருந்தால் உங்களுடைய வேத அறிவினை அவர்களோடு பகிர்ந்துகொண்டு, வேதவசனங்களை அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்யுங்கள்.
- **உற்சாகமூட்டி ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்**, குறிப்பாக பிரசங்கித்தவரை, பாடல் நடத்துனரை, ஜெபத்தினை நடத்தினவரை, உடன் கிறிஸ்தவரை, புதியவிருந்தினரை மேலும் மற்றவர்களையும் இவ்வாறு செய்யுங்கள்.
- **ஆராதனைக்குப் பிறகு சகோதரர்களை, விசேஷமாக விருந்தினர்களை சந்திக்கக் கூடுதல் நேரத்தை செலவிடுங்கள்.** அவசர அவசர மாக வெளியேறிவிடாதீர்கள். மேலும் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் மட்டும் பேசாதீர்கள். விருந்தினர்கள் அல்லது புதிதாக வருகை தந்தவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள்.



வல்லமையுள்ள வசனங்களையும் மேன்மையாக எண்ணுங்கள் அப்பொழுது உயர்த்தப்படுவீர்கள்.

**இரண்டாவது;** மற்றவர்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களை நாம் பார்க்கிறோம். ஒரு மனிதன் மற்றொரு மனிதனை குறித்து மேன்மையாக எண்ணுவதற்கு என்ன இருக்கிறது. அவனும் ஒருநாளில் மண்ணுக்குத் திரும்புவான் இவனும் ஒருநாளில் மண்ணுக்குத் திரும்புவான். இப்படியிருக்கிற மனிதனை குறித்து மற்றொரு மனிதன் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இவ்வுலகத்திலே அப்படிப்பட்ட மக்கள் அதிகமாக காணப்படுகிறார்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் கர்த்தருடைய மார்க்கம் வளர்ந்ததைப்போல ஒரு சில தவறான கோட்பாடுகளும் தலை தூக்கமுயற்சித்தன. ‘‘தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்’’ (அப்.5:36). இந்த நானூறுபேர் அவனைத் தூக்கிக்கொண்டு ஆடினார்கள். முடிவில் என்னவானது? அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் மடிந்துபோனார்கள், பின்பு சிதறி அவமாய்ப்போனார்கள் என்று காண்கிறோம். இப்படி மனிதனை தூக்கிக்கொண்டு செல்லுகிறவர்கள் எல்லோரும் ஒரு நாளில் அவமாய்ப்போவார்கள். இன்றைய நாட்களில் பணம் இருக்கிறவர்களிடம் அநேகர் சென்று ஒட்டிக்கொண்டு அவர்களுக்கு ஏற்றார்போல பேசி அவர்களை உயர்த்திக்கொண்டும், மேன்மையாக எண்ணிக்கொண்டும் இருக்கின்றனர். அவர்களிடம் பணமும் பலமும் குறைந்தவுடன் அவர்களைப் பின்பற்றுவதை விட்டுவிட்டு வேறே நபரிடம் ஒட்டிக்கொள்வார்கள். இப்படியே பணம் எங்கே இருக்கிறதோ அவர்களோடு இருந்து அவர்களை மேன்மையாக எண்ணுவார்கள். இந்தவிதமாக முதல் நூற்றாண்டு காலத்தில் தெயுதாஸ் உருவாக்கின வழி அவனோடு ஒன்றுமில்லாமற்போயிற்று. அவனைத் தொடர்ந்து யூதாஸ் என்பவன் எழும்பினான். ‘‘தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான் அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்’’ என அப்.5:37-ல் படிக்கிறோம். இப்படியே இன்றும் அநேக மனிதர்களைப் பின்பற்றுகிற மார்க்கங்கள் தோன்றுகிறது. அவர்ளுக்குப் பின்பு அவைகள் அழிந்துபோகின்றன. ஆனால் ஆண்டவர் உருவாக்கிய ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் நிலைத்திருக்கிறது.

‘‘ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான், அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான், அவன் புழுப்புழுத்து இறந்தான்’’ (அப்.12:21-23). தேவனுக்குச் சமமாக ஏரோது ஜனங்களாலே உயர்த்தப்பட்டான். இதை ஏற்றுக்கொண்ட ஏரோது சிலநொடிகளில் தேவதூதனால் அடிக்கப்பட்டான் என காண்கிறோம். மகிமையானவரை உயர்த்தாமல் தன்னை உயர்வாக ஜனங்கள் எண்ணுவதை ஏற்றுக்கொண்டபடியால் புழுப்புழுத்து இறந்தான். நீங்கள் மற்றவர்களை உயர்வாக

அல்லது மேன்மையாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய எண்ணத்தை மாற்றுங்கள். "ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே" என்று பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.3:21).

**மூன்றாவது; கர்த்தரைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்கள்.** அப்போஸ்தலர்கள் கர்த்தரையே மேன்மையாக எண்ணினார்கள். பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்கு போகும் வழியில் ஒரு சப்பாணியின் கைகளைபிடித்துத் தூக்கிவிட்டார்கள். அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடே தேவாலயத்திற்குச் சென்றான். இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். "பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி; இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன? என்று கேட்டார்கள். மேலும் அவர்களைப் பார்த்து "அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றார்கள் அப்.3:12,மற்றும் 16 வசனங்கள். இங்கே அப்போஸ்தலர்கள் தங்களை உயர்த்தவில்லை. அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது என்றார்கள். கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தினார்கள். இவர் ஜெபித்ததால் இவன் சுகமானான் அவர் ஜெபித்ததால் அவன் சுகமானான் என்று சொல்ல கேள்விப்படுகிறோம். ஆனால் அப்போஸ்தலர்கள் தங்களை அல்ல கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். அதைப்போல பவுலுக்கும் பர்னபாவுக்கும் பூமாலைகளையும் எருதுகளையும் பலியிடும்படி பூஜாசாரி கொண்டு வருகையில் அவர்கள் கூட்டத்திற்குள்ளே ஓடி, தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு "மனுஷரே. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்" என்றார்கள் (அப்.14:15). அவர்கள் மனுஷரால் வரும் மகிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் "மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்" என்ற 2கொரி.10:17-வசனத்தின் படி கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுங்கள்.

**நமக்குள் எழும்பும் மேன்மைபாராட்டலை நம்மை விட்டு எடுத்துப்போடமுடியுமா?**

நாம் நினைத்தால் முடியும். பவுல் சொல்லுகிறார். "நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார் (2கொ.10:5). அதைப்போல நீங்களும் தேவனுக்கு விரோதமாக உங்களில் எழும்புகிற மேட்டிமையான எண்ணத்தை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்தவேண்டும். ஜெபிக்கிறோம்.



# எருசலேம் - Jerusalem

-K.R.K.Ravi Asir



எருசலேம் யூதா மற்றும் பென்யமீன் தேசங்களுக்கு இடையே தாவீதின் காலம் வரைக்கும் எபூசியருடைய ஆளுகையின் கீழ் இருந்துவந்தது. அதற்கு பின் ராஜாவாகிய தாவீதின் நாட்களிலும், அவனை தொடர்ந்து வந்த பல சந்ததிகளின் நாட்களிலும் இந்நகரம் அவர்களுடைய தலை நகரமாகவும் இருந்திருக்கிறது.

யோயாக்கீனுடைய ஆளுகையின்போது அவன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். இந்த சமயத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரின் சேவகர் எருசலேமை கி.மு 598 டிசம்பர் மாதந் தொடங்கி மூன்று மாதங்கள் முற்றுகை போடப்பட்டது (2இரா.24:9-10).

யோயாக்கீனுடைய சிறிய தகப்பனாகிய மத்தனியா என்னும் சிதேக்கியா நேவுகாத்நேச்சாரால் எருசலேமின் மேல் ராஜாவாக்கப்பட்டான். சிதேக்கியாவின் இயற்பெயர் மத்தனியா (2இரா.24:17). இவனுடைய நாட்களில் ஆசாரியரில் பிரதானமானவர்களும், ஜனங்களும் கூடி புறஜாதிகளுடைய அருவருப்புகளின்படியும் துரோகம் பண்ணி கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தை தீட்டுப்படுத்தினார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால் தேவன் அவர்கள்மேல் கல்தேயருடைய ராஜாவை வரப்பண்ணி அவர்கள் எல்லோரையும் தேவன் அவன்கையில் ஒப்புக்கொடுத்தார் (2நாளா.36:14-17). சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் எருசலேம் நகரம் முற்றுகை போடப்பட்டிருந்தது (1இரா.25:2). நகரத்திலே பஞ்சம் அதிகரித்தது கி.மு.587-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலே நகரத்தின் மத்தியில் திறப்பு கண்டது (2இரா.25:3). பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் பத்தொன்பதாம் வருஷத்திலே அவனுடைய காவல் சேனாபதி ஆகிய நெபுசராதான் வந்து எருசலேமை அக்கினியால் சுட்டெரித்தான். யூதா ஜனங்கள் சிறையிருப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள் (2இரா.25:8-11,21). இச்சமயத்திலே தான் தேவனுடைய தாசனாகிய தானியேல் பாழாய் கிடந்த எருசலேமுக்காகவும், நிந்தையாக்கப்பட்ட அதின் ஜனங்களுக்காகவும் தம்மைத் தாழ்த்தி தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அப்பொழுது தூதனாகிய காபிரியேல் தரிசனத்திலே தானியேலுக்குத் தோன்றி எருசலேம் மறுபடியும் கட்டப்படும் என்றார் (தானி.9;12-25).

பெறப்படும் சத்தியம் 1. இயேசு பிறக்க பூமியில் எந்த வீடும் கிடைக்கவில்லை. பிறந்த பிற்பாடே சத்திரத்தின் முன்னனையில் இடம் கிடைத்தது (லூக்.2:6,7). 2. ஏழையின் பிரதிநிதியாக ஏழ்மையாக பிறந்தார் (லூக்.2:12). 3. மேய்ப்பர்கள் இயேசு என்னும் குழந்தையை சத்திரத்தின் முன்னனையில் பார்த்தார்கள். 4. சாஸ்திரிகளோ இயேசு என்னும் குழந்தையை வீட்டிலே பார்த்தார்கள் (மத்.2:11). இப்படியாக இயேசுவின் பிறப்பைப் பற்றி தெரிந்து கொள்கிறோம்.

**கிறிஸ்துமஸ் பண்டிகை:**

இயேசு கிறிஸ்து பிறந்தது உண்மை என்றாலும் டிசம்பர்25 என்பதற்கு ஆதாரம் இல்லை. உலகம் (பெண்கள்தினம், காதலர்தினம், தாய்மார்கள்தினம்) இதுபேன்ற அநேக தினங்களை முக்கியப்படுத்தி கொண்டாடுவது வழக்கமாயிற்று. அது போலதான் கிறிஸ்துமஸ் என்பது கி.பி 6-ம் நூற்றாண்டு வரை கிடையாது. கி.பி 7-ம் நூற்றாண்டு முதல் 11-ம் நூற்றாண்டுவரை கிறிஸ்துமஸ் என்கின்றதான பண்டிகை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மாதம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் ஒன்று கூடி பண்டிகையாக கொண்டாடினார்கள். கிறிஸ்துமஸ் என்பதின் அர்த்தம் என்னவென்று பார்த்தால் (கிறிஸ்து-மாஸ்) கிறிஸ்தவர்கள் ஒன்று கூடுவது ஆங்கிலத்தில் மாஸ் என்றால் கூட்டம் இதுபோல கொண்டாடி இன்று கிறிஸ்துமஸ் ஆக மாறியுள்ளது. இதுபோல் ஒவ்வொரு முறையும் கூடிவந்திருக்கையில் ரோமக்கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப்பாண்டவரின் கட்டளைக்கு இணங்கி வருடந்தோறும் டிசம்பர் 25-ம் தேதியன்று கிறிஸ்து பிறந்த தினம் என்றும் கிறிஸ்துமஸ் என்ற பண்டிகையாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், ஒருவேளை இயேசு டிசம்பர் 25 அன்று பிறந்து இருப்பார் என்றால் (லூக்.2:8-11) -ல் பார்க்கும்போது தேவதூதன் கிறிஸ்து பிறந்து இருக்கிறார் என்று மந்தையை காத்துக்கொண்டு இருக்கிற மேய்ப்பர்களிடம் சொன்னார். மந்தையை மேய்ப்பவர்கள் பனிகாலத்தில் கூடாரம் போட்டு கொண்டு மேய்க்க மாட்டார்கள் வெய்யில் காலங்களில் தான் கூடாரம் போடுவார்கள். அப்படியென்றால் மார்ச் முதல் ஜீன் மாதத்திற்குள்ளாக இயேசுவின் பிறப்பு இருந்திருக்கக்கூடும் என்று கணிக்கிறார்கள். இப்படி மதத் தலைவர்கள் ஏற்படுத்தின நாட்களை கிறிஸ்து பிறந்தார் என்று நாம் கொண்டாடி மகிழ்வது தவறாகும். ஏன் மதத் தலைவர்கள் இதனை செய்து இருக்கக் கூடும் என்பதற்குக் காரணம் இன்று ஆங்கில மாதம் ஜனவரி முதல் டிசம்பர் வரை போப்பாண்டவர் இயற்றிய பெயர்தான். அதனைபற்றியும் பார்ப்போம். காலங்களை முதன் முதலாக வகுத்தவர்கள் எகிப்தியர்கள் தான். ஒவ்வொரு 30 மற்றும் 31 நாட்களைக் கொண்ட 12 மாதங்களை வகையறுத்தவர்களும் அவர்கள் தான். அவர்களிடம் இருந்து ரோமர்கள் காலத்தில் தான் ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்டு வகையறுக்கப்பட்டன. ஜனவரி என்பது ரோமானிய கடவுளான ஜானஸ் என்ற கடவுளின் பெயரால் அழைக்கப்பட்டது. ஜனவரி ஆண்டின் முதலாவது மாதமானதால் ஜானஸின் பெயரில் இருந்து மாற்றப்பட்டது. பிப்ரோ என்ற லத்தின் வார்த்தையிலிருந்து ஆங்கிலத்தில் பிப்ரவரி என்று பெயர் வந்தது. ரோமானியப் போர் தெய்வமான மார்ஸ் என்னும் தெய்வத்தின் பெயரிலிருந்து மார்ச் என்று பெயர் பெற்றது. ஏப்ரிர் என்ற சொல்லிலிருந்து ஏப்ரல் என்னும் பெயர்வைக்கப்பட்டது. ஏனென்றால் இதற்கு மொட்டுக்கள் மலர்தல் என்று பொருள். ஏப்ரலில் தான் வசந்தகாலம் வருகிறது. எனவே ஏப்ரல் பெயர்பெற்றது. ரோமானியக் கடவுளின் மையா என்ற பெயரிலிருந்து மே என்று பெயர் வழங்கப்பட்டது. இப்படியே 12 மாதங்களையும் போப்பாண்டவர் பெயர் மாற்றியதால் டிசம்பர் 25 கிறிஸ்து பிறந்த தினம் என்று கட்டளை போட்டதால் இன்றுவரை கடைபிடித்து வருகிறார்கள். ஆனால் நாமோ தேவன் சொல்லாத ஒன்றை செய்யாது இருப்போம். வெளிப்படுத்தப்பட்டவைகளை நாம் பூரணமாகக் கைக்கொள்வோம்.



## நடப்புச்செய்திகள்




- பாரிமுனையில் புதிய டி.என்.பி.எஸ்.சி., அலுவலகத்தை முதல்வர் திறந்துவைத்தார்.
- அதிகநேரம் மொபைல் போன் மூலம் காதோடு பேசினால் காது... கேட்காது என டாக்டர்கள் எச்சரிக்கை.
- தமிழகத்தில் மின் வெட்டால் அனைத்து தொழில்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் எதிரி அசாஞ்ச் என அந்நாட்டு ராணுவ ஆவணங்களில் குறிப்பிடப்படுள்ளது.
- அதிக எடை கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோளான, 'ஜி சாட் - 10' பிரெஞ்ச் கயானாவில் இருந்து, 'ஏரியான்-5' ராக்கெட் மூலம் விண்ணில்

- குமுளியில் நடைபெற்ற மூன்றாவது ரீட்ரீட்டை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- போடியில் கூட்டங்களை ஒழுங்குசெய்த அனைத்து ஊழியர்களுக்காகவும், சபைவளர்ச்சிக்காகவும்...
- புதிய வாசகர்களுக்காக...
- மழைக்காக...
- ஞானஸ்நானம் பெற்ற சகோதரி சாலினிக்காக...

**ஜெபியுங்கள்**




## பொது அறிவு சோதனை

1. கேரளாவின் முக்கிய பணப்பயிர் எது?
அ) தேயிலை ஆ) புகையிலை இ) ரப்பர்
2. மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் நாள்?
அ) ஆகஸ்ட் 10 ஆ) அக்டோபர் 10 இ) டிசம்பர் 10
3. சர்வதேச தொழிலாளர் அமைப்பு அமைக்கப்பட்டுள்ள இடம்?
அ) வியன்னா ஆ) ரோம் இ) ஜெனிவா
4. மியான்மரின் நாணயம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) ரிங்கிங் ஆ) கியாட் இ) டாலர்
5. ஐந்து கடல்களின் நாடு என்றழைக்கப்படுவது எது?
அ) இந்தியா ஆ இலங்கை இ) எகிப்து

விடைகள்: 1.இ 2.இ 3.இ 4.ஆ 5.இ

# "மனந்திரும்புதல்" என்றால் என்ன?
## What Is "Conversion"?




*-J.C.Choate*

வெப்ஸ்டரின் அகராதி (Webster's Dictionary) படி 'மனந்திரும்புதல்' என்பதன் பொருள் "அனைத்துக்காரியங்களிலிருந்து மாற்றம்" "தோற்றத்தில் மாற்றம்" "ஒரு நம்பிக்கையிலிருந்து இன்னொரு நம்பிக்கைக்கு மாறுதல்" ஆகும். புதிய ஏற்பாட்டு வசனங்கள் வரையறைகளின் "வைன்ஸின் அகராதி" (Vine`s Dictionary) 'மனமாற்றம்' என்பது "தலைகீழான மாற்றம் ஆகவும்; வசனம் இதை மனந்திரும்புதலாக ஒன்றிலிருந்து திரும்பி, இன்னொன்றிற்கு மாறுதலாகவும் பாவ வாழ்விலிருந்து தேவனிடத்திற்குத் திரும்புகின்றதாகவும் பொருள்படுத்துகிறது.

மனந்திரும்புதலில் மூன்று நிலைகள் உள்ளன: **இருதயத்தின் மாற்றம், வாழ்வின் மாற்றம், மற்றும் நிலையின் மாற்றம்.**

நாம் பேசிக்கொண்டிருப்பது, நிச்சயமாக, கிறிஸ்துவினிடத்திற்கு மாற்றப்படுவது குறித்ததாகும்: அவரிடத்தில் ஒரு விசுவாசியாக மாறுவதற்கு, அவருக்கு அர்ப்பணிப்பதற்கு, அவருடைய உபதேசத்திற்குக் கீழ்படியும்படி மாறுவதற்கு மேலும் பாவத்திலிருந்தும், தீமையிலிருந்தும் திரும்பி கிறிஸ்து நம்மிடத்தில் எதிர்பார்க்கும் வாழ்வின் வாழ்க்கைக்கிணங்க வாழ்வதையே பொருள்படுத்துகிறது.

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல் நடிப்பதைப்பற்றியும் அல்லது பணம் மற்றும் வேறு பொருட்களை நாடினால் தான் ஒருவன் ஒரு கிறிஸ்தவன்" என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்கமுடியும் என்பதைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கவில்லை."மனந்திரும்புதலைப்" பற்றி பேசினால் சில குடும்ப அங்கத்தினர்கள் சந்தோஷப்படுத்தப்படுவார்கள் என்றோ அல்லது நாம் நம்முடைய சமுதாயத்தில் சமூக சகவாசப்பிரியராக இருக்க முடியுமென்றோ அல்லது மற்ற வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றோ பேசிக்கொண்டிருக்கவில்லை.

இன்றைய உலகத்தில், பலர் வசதியான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று சில "சமுதாய சபை" யில் கலந்துகொள்ளத் துவங்கியுள்ளனர். மேலும் அடிக்கடி எந்த "நண்பர்களையும்" அருகில் கொண்டிராமல் "குடும்பத்"



என்பீர்களாகில் நீங்கள் அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது குறித்தும், அவர் உயிர்த்தெழுந்து உங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார் என்பது குறித்தும் சந்தேகப்படுகிறீர்கள் என்று தான் அர்த்தம். அன்றைய நாளில், அப்போஸ்தலர்களும், சீஷர்களும் இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் கண்டோம் என்று பல முறைகூறியும் அநேகர் சந்தேகங்கொண்டனர். அவர்கள் சந்தேகங்கொண்டதினால் இயேசு உயிர்த்தெழுந்து, அவர் நாமத்தில் கூடினவர்கள் மத்தியில் இருந்ததும், இருப்பதும் பொய்யாகிவிட்டதா? ஏமாந்து போகாதீர். தேவனைத் தேட வேண்டிய இடத்தில் தேடி அவரைக் கண்டு பணிந்து கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாய் வாழும்படி அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்காய் காத்திருப்போரை அழைத்துச்செல்ல இயேசு மீண்டும் வருகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருப்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவிற்கு அவர் மீண்டும் வரப்போவதும் உண்மை! உண்மை!! உண்மை!!! அவரை சந்தித்து எதிர்கொண்டு போக ஆயத்தப்படுவோமாக!

அவர் நாமத்தினாலே கூடியிருக்கிறவர்கள் மத்தியிலும், அவரை தன் சொந்த இரட்சகராக தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இப்பூமியில் வாழுகிறவர்கள் மத்தியிலும், தேவன் இருக்கிறார். ''இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'' (மத்.18:20). மரித்தோரிடத்திலே அல்ல!

# கிறிஸ்து பிறப்பா அல்லது கிறிஸ்துமஸ்சா?

*G.Vellusamy*



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களை இப் பத்திரிக்கையின் வாயிலாக முதன் முதலில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் உலகமெங்கும் கொண்டாடபோகின்ற 'கிறிஸ்துமஸ்' பண்டிகையை கிறிஸ்வர்களாகிய நாம் கொண்டாடுவது சரியா அல்லது தவறா என்று தியானித்து பார்ப்போம்.

இயேசு என்பதின் அர்த்தம் **இரட்சகர்**. இயேசு என்பது தேவனால் கொடுக்கப்பட்ட பெயர் ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார் என்பது (மத்.1:21). மேலும் கிறிஸ்து என்பதின் அர்த்தம் **அபிஷேகம் பண்ணப்பட்டவர்** என்று வேதம் கூறுகிறது. பிதாவாகிய தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கி மனிதனையும் படைத்தார் என்று பார்க்கின்றோம். அந்நாட்களில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. இப்படி பலி செலுத்திவிட்டு, மறுபடியும் பாவம் செய்ததினால் தேவன் அவற்றைப்போக்க ஒரே பலியாக தமது சொந்தக் குமாரனை நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்கு இப்பூமியில் பிறக்கச் செய்தார். இயேசுவின் பிறப்பு தேவனுடைய திட்டம். தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாக நடந்தது (ஆதி.3:15; மத்.1:22).

இயேசு பிறந்தது உண்மை என்று வேதத்தில் பார்க்கும்போது இயற்கை சாட்சியாக உள்ளது (மத்.2:7). சாஸ்திரிகள் சாட்சி (மத்.2:1). இயேசுவின் பிறப்பிலிருந்து

அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; **அவர்களும் நம்பவில்லை.**

அன்பு சகோதரிகளே, இன்றைய நாளிலும் கூட அநேகர் இவ்வாறு நம்பாதவர்களாகவே இருக்கின்றனர். இயேசு சொன்னதையும் தூதன் சொன்னதையும் நம்பினவர்கள் அவரைக் கண்டார்கள். அதுவும் இயேசுவின் நாமத்தில் விசுவாசம் கொண்டிருந்த ஒருமனமுள்ளவர்களாகிய அந்த சீஷர்கள் அவரைக்கண்டார்கள். முன்னே தியானித்த வசனத்தில் அவருடைய நாமத்தில் கலிலேயாவில் ஒன்றுகூடினவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள். ஆம், அன்பானவர்களே, இன்னும் நீங்கள் இயேசுவே மெய்யான தேவனும், நித்தியஜீவனுமாயிருக்கிறார் (2யோவா.20) என்று நம்பவில்லை என்றால் நிச்சயமாகவே அவரைக் காணமாட்டீர்கள். இயேசுவின் நாமத்திலே கூடியிருக்கிறவர்களிடத்திற்குச் சென்று அவர்களோடே கூட நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளுங்கள். மாம்சபிரகாரமாக அல்ல.

மேலும் தேவனைக் காணமுடியாத எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று தேவனைத் தேடிக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதரியே, உங்களுக்குச் சொல்லுகிறேன்,நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தால் நீங்களே தேவனுடைய ஆலயம். “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்” (1கொரி.3:16,17) என வேதம் கூறுகிறது. ஆம், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்வீர்களானால் ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய அவர் உங்களில் வாசம்பண்ணுவார். அவர் உங்களில் வாசம்பண்ணுகிறபோது நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாகிறீர்கள். தேவனுடைய ஆலயமாகிய நீங்கள், இன்னும் சந்தேகங்கொண்டு தேவனை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களோடேகூட தேடி அவரைக் கண்டுகொள்ளுங்கள்.

தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நீங்கள் அவருக்காக எப்பேர்ப்பட்ட ஆலயத்தைக் கட்டப்போகிறீர்கள் என வேதம் கேள்விஎழுப்புகிறது. அப்படியிருக்க தேவனைக் காணும்படி புண்ணிய ஸ்தலங்களுக்கும், தேவாலயம் என அழைக்கப்படுகிற பெரிய பெரிய கட்டடங்களை நோக்கியும் நீங்கள் செல்வீர்களானால் உங்களை நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். நிச்சயமாகவே அங்கே தேவன் இல்லை. “இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்” (வெளி.3:20) என்று உங்கள் இதயக் கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் வந்து உங்களில் வாசஞ்செய்ய இடங்கொடுத்தால் அங்கே இயேசுவைக் காண்பீர்கள். இயேசுவுக்கு என் இதயத்தில் இடங்கொடுத்து என்ன சமாதானத்தைப் பெற்றேன்



தொடர்பின்றி இருக்கின்ற மக்களுக்காக இவர்கள் "தங்களுடையதையே" கொடுக்கின்ற உணர்வுடையவர்களாயிருக்கின்றனர். நாமகரண குழுக்கள் கோட்பாட்டினை உபதேசித்து, ஆவிக்குரிய தொழுகையை ஆராய்ந்து பார்க்கவில்லை அல்லது அதனுடைய மாபெரிய முக்கியத்துவத்தை எண்ணிப்பார்க்கவில்லை. இது ஒருசபை, இது ஆவிக்குரிய உணர்வினை கொடுக்கிறது, மேலும் சமூக தேவையைப் பூர்த்தி செய்கிறது. தேவன் மனந்திரும்புதல், கிறிஸ்தவம், ஒரே சபை, தொழுகை மற்றும் கிறிஸ்தவனின் வாழக்கை முறை போன்றவற்றைக் குறித்து என்ன சொல்கிறார் - எதையெல்லாம் நாம் கொடுக்கிறோமோ அதை தேவன் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார் என்ற உணர்வற்ற விசுவாசத்தினால் இந்தக் காரியங்களைக் கூட படிக்காதவர்களாயிருப்பர்.

ஆனால் இன்று சபைகளை நடத்துகிற அநேகர் "வேறொரு சுவிசேஷத்தை" பிரசங்கித்துக் கொண்டிருக்கின்றனர் இது குறித்து பவுல் கலாத்தியர் 1:8,9-ல் எச்சரிக்கிறார், "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்". கள்ளப்போதகர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளல்ல ஆனால் அவர்கள் சாத்தானின் ஸ்தானாபதிகள். 2கொரிந்தியர் 11:14,15 இப்படிப்பட்ட மனிதனைக் குறித்து விவரிக்கிறது; "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்".

கிறிஸ்து, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுத்துத் தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று சொன்னார் (லூக்.9:23).

உண்மையான மனந்திரும்புதல் சௌகரியத்தின் அல்லது ஒரு சமூக வாழ்வின் அல்லது சௌக்கியத்தின் மேலும் சம்மதத்தில் அடிப்படையில் ஏற்படுவதில்லை. இது புகழ்ச்சியிலிருந்து ஆனால் பாவக்காரியங்களிலிருந்து முழுவதும் திரும்புவதாக பொருள்படும். இருதயத்தில் இப்படிப்பட்ட மாற்றம் ஏற்படும்போது தியாகத்தையும் சிலுவையைச் சுமப்பதையும் குறிக்கிறது.

கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டவனாகயிருக்க ஒருவன் தேவனுடைய வசனத்தை **கேள்விப்பட வேண்டும்** (ரோம.10:17), தேவனிடத்தில் **விசுவாசம்** வைத்து, கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று கிறிஸ்துவிலும் விசுவாசம் கொண்டு (எபி.11:6), கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் உண்மையை விசுவாசித்து (1கொரி.15:1-4), **மனந்திரும்ப** ஆயத்தமாயிருந்து அல்லது பழைய பாவ வாழ்வை விட்டு மனந்திரும்பி (லூக்.13:3; அப்.17:30), இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று மற்றவர்களுக்கு முன்பாக தன் வாயினால் **அறிக்கையிட்டு** (மத்.10:32,33) அதன்பின் தன்னுடைய பாவமன்னிப்புக்கென்று **ஞானஸ்நானம்** பெறவேண்டும் (அப்.2:38).

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை தன்னுடைய துவக்கத்தைக் கொண்டிருந்தபோது, ஜனங்கள் கிறிஸ்துவைக் குறித்து போதிக்கப்பட்டு, அவரிடத்தில் விசுவாசம் கொண்டு, அவர்கள் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டுமென அறிந்துகொள்ள விரும்பினார்கள். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர் களும்;"நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது "பரிசுத்த ஆவியின்" வரத்தை பெறுவீர்கள் (அப்.2:38) என்றனர்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு, அப்போஸ்தர்கள் வேறொரு மக்கள் கூட்டத்தில் பேசுகையில் அவர்கள்: "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிப்பிட்ட இயேசு கிறிஸ்துவை, அவர் உங்களித்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள் " என்றனர் (அப்.3:19,20).

இந்தப் பகுதியில், அப்போஸ்தலர் 2:38-ல் குறிப்பிடப்பட்டுள்ள "ஞானஸ்நானம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "மனந்திரும்புங்கள்" எனவும் "பரிசுத்தஆவியின் வரம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "இளைப்பாறுதலின் காலங்கள்" என்றும் வந்துள்ளது. ஆனால் இந்த இரண்டு வசனங்களிலும், மனந்திரும்புதல் என்ற பாடம் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலர் புத்தகத்தில் மனந்திரும்புதலைக் குறித்து பதினொரு நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிகழ்விலும், ஒரே சுவிசேஷம் - மனிதனை அவனுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்ற நற்செய்தி - பிரசங்கிக்கப்பட்டது, ஜனங்கள் அதை கேள்விப்பட்டு, விசுவாசிகளாக மாறி, அவர்கள் மனந்திரும்பி - பாவத்தை விட்டு திரும்பி தேவனிடத்திற்கு - திரும்பினார்கள். அவர்கள் கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று தங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டார்கள், மேலும் அவர்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் படுத்தப்பட்டார்கள். இது தான் உண்மையான மனந்திரும்புதல்.

மனந்திரும்பி இருப்பதில்,

- அவர்கள் தங்களுடைய மனம் மாறி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தார்கள்.
- அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் நற்குணத்தையும் பரிசுத்தத்தையும் பின்பற்றும்படிக்கு பாவ வாழ்விலிருந்து மாற்றினார்கள்.
- அவர்கள் சாத்தானின் இருளான ராஜ்யத்திலிருந்து இழந்துபோன தங்கள் நிலையை இரட்சிக்கப்பட்டிருக்கும்படிக்கு கிறிஸ்துவின் ஒளியின் ராஜ்யத்திற்கு மாற்றினார்கள். இந்த மாற்றத்தின் நிலை அவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் (மாற்கு 16:16) ஆவியில் மறுபடியும் பிறந்து (யோவா.3:3,5) விட்டவர்களாக நிறைவேற்றப்பட்டது. இதைச் செய்வதின் மூலம் அவர்கள் கிறிஸ்துவை அடைந்து, அவருடைய மரணத்திற்குள்ளாக ஞனாஸ்நானம் பெற்றவர்களாக, அவரோடேகூட புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு எழுப்பட்டவர்களாக இருந்தார்கள் (ரோம.6:3,4). ஞானஸ்நானத்தின் மூலம் பிறந்த இந்த பிறப்பு அவர்களை கிறிஸ்துவின்



(4) “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; ....” (யோவா.6:54).

(5) “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (யோவா.6:57)

இந்த விருந்தை சாதாரணமான ஒரு “சடங்காக” நினைப்பவர்கள் தவறிழைக்கின்றனர். இயேசு மிகுந்த ஆழமான கருத்துடனே நிதானமாக பொருட்களை தெரிவுசெய்தார் அத்தோடு இதில் பங்குகொள்ளுகிறவர்கள் இதன் பொருள் தங்களுக்குரியதென புரிந்துகொள்வது அவர்களுடைய பொறுப்பாகவுமிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமே இந்த ஒழுங்கான நினைவுகூருதலில் பங்குகொள்வதில் தான் கட்டப்பட்டுள்ளது. **நாம் ஜீவிக்கின்றோம், ஏனென்றால் நமக்கு ஜீவன் கொடுக்கும்படி அவர் மரித்தார், ஏனென்றால் நம்மில் அவர் ஜீவிக்கிறார்.**

## அவர் இங்கே இல்லை - He Is Not Here



*-Glory Arjunan*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை. அவர் மரித்தோர் இருக்கிற இடத்திலும இல்லை. அப்படியானால் அவர் எங்கேயிருக்கிறார்?

அன்று மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவைத் தேடி கல்லறைக்குச் சென்றனர். அப்போது ஒரு தூதன் சிலுவையில் அறைப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை என்றான் (மத்.28:5,6). மேலும் அவன் அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான் (மத்.28:7). இயேசுவும்கூட என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்.28:10). அப்படியே 'பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள், சிலரோ **சந்தேகப்பட்டார்கள்'** (மத்.28:16). மேலும் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் கர்த்தர் தரிசனமானார். அவள் சீஷர்களிடத்தில் போய் அந்த செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது **நம்பவில்லை.** அதன்பின் அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்.

ஆனால் அவருடைய நாளில் கவனித்துக்கேட்டு இரத்தம் புசிப்பதை அனுமதிக்காத பழைய ஏற்பாட்டு கட்டளைக்கு பழக்கப்பட்டு போனவர்களுக்கு இயேசுவின் கூற்று வெறுப்பூட்டுகின்ற சமயக்கொள்கைக்கு மாறுபட்ட கருத்தாக இருந்திருக்கவேண்டும். அவர் இதை அறிவார் ஆயினும் அந்த பூரணமான அறிவுள்ள சத்தியங்கள் உருவாக்கப்பட அந்த அறிமுகம் அவசியமாயிருந்தது.

**உடன்படிக்கையின் அப்பம்**

அவருடைய சிலுவைப்பாடுகளுக்கு முன்பு அப்பத்தை எடுத்து அவர், "வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது..."(மத்.26:26) என்றார்.

இந்த பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படிக்கு, இந்த எண்ணங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுகின்றன:

(1) "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்.22:19).

(2) "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து..." (1கொரி.11:26).

ஆதி கிறிஸ்தவர்கள் நினைவு விருந்துகளுக்கான இரண்டு எடுத்துக் காட்டுகளைக் கொண்டிருந்தனர்: **ஓய்வுநாள்தோறும்** கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்படும் நித்திய உடன்படிக்கைக்குரிய அப்பம் (லேவி.24:5-9) மற்றும் **வருடந்தோறும்** கைக்கொள்ளவேண்டியிருந்த பஸ்காவாகிய அப்பம். இன்று கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கைவைத்துள்ள பிரிவினை சபை அங்கத்தினர்கள் அவருடைய நினைவுகூருதலில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கொருமுறை பங்குகொள்கின்றனர், மேலும் புளிப்பில்லா அப்பத்திற்கும் திராட்ச ரசத்திற்கும் பதிலாக மற்ற பொருட்களை வைப்பது அசாதாரணமாக இருப்பதில்லை.

ஆனால் பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் அடிக்கடி வருகின்ற அவர்களுடைய விருந்து அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்டிருந்த பொருட்கள் போன்றவற்றினிடையே தொந்தரவு ஏற்பட்டிருக்கவில்லை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவன் தம்முடைய குமாரனின் நினைவுகூருதலை எத்தனை முறை கடைப்பிடிக்க விரும்புகின்றார் என்பதைப்பற்றிய அவர்களுடைய புரிந்துகொள்ளுதலில் மிகத் தெளிவாக இருந்தனர். மேலும் அவர்கள் அவருடைய சரீரத்தையும் அவருடைய இரத்தத்தையும் குறிக்கும் மாதிரிகள் எவை என்பதையும் தெளிவாக அறிந்திருந்தனர்.

இன்று உண்மைக் கிறிஸ்தவர்கள் இதே மாதிரியையே பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருவதில் அவர்களுடைய நோக்கம் அப்பம் பிட்குதலிலும் பானம்பண்ணுதலிலும் பங்கெடுப்பதாகவே இருக்கிறது (1கொரி.11:24-26).

(3) "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..... அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், ..... தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" (1கொரி.11:28,26).



குடும்பத்திற்குள்ளும், அவருடைய சபைக்குள்ளும் இணைக்கிறது, எனவே அவர்களால் தங்களுடைய மீதமுள்ள வாழ்நாட்களை தேவனுடைய பிள்ளைகளாக வாழ முடிகிறது (வெளி.2;10).

இதுவே கிறிஸ்துவுக்குள் உண்மையான மனந்திரும்புதல். இது நேர்மையாகவும், இருதயத்திலிருந்தும், மேலும் கர்த்தரை தினமும் தொழுது கொண்டு சேவிக்கவும், அவர் புதிய ஏற்பாட்டில் சொல்லிய எல்லாவற்றின்படி செய்யவும், இது வாழ்நாளெல்லாவற்றிற்குமான அர்ப்பணிப்பாகும்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பியிருக்கிறீர்களா?

கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோம.16:16).

-மொழியாக்கம் டேவிட் பிலிப்

**துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே - நீதி.4:14**

**வேத அறிவுப்போட்டி 145-ல் வெற்றி பெற்றவர்கள்**

1. Sis.ஜாஸ்மின் வின்செண்ட்ராஜ் - மதுரை
2. Sis.விஜிலா - தேனி
3. M.வேலு - வேலூர்
4. R.கிப்ட்ராஜாமணி - ஒட்டநத்தம்
5. IRA.எதிராசன் - சங்ககிரி
6. M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
7. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்

**வேத அறிவுப்போட்டி என்145-ன் விடைகள்**

1. செலொப்பியாத்தின் -எண்.36:1
2. ஆம் -பிலே23
3. எலெயாசார் -உபா.10:6
4. ஆம் -எபி.5:7
5. யோசுவா -யோசு.18:10
6. கடலின் அலைக்கு -யாக்.1:6
7. எப்பிராயீம் மலைத்தேசத்தான் - நியா.19:16,24
8. தேவனுடைய பலத்த கைக்குள் - 1பேது.5:6
9. போவாஸ் -ரூத் 3:11
10. பேதுரு -1பேது.1;14

**ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு என் Ref.No-யை எழுதவும்.**

**நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணையும் தெரியப்படுத்தவும்.**

**துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் -மத்.5:4**


**நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் – யோவான் 10:9**

பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து நித்திய பலி
# Jesus Christ the Eternal Sacrifice

பண்டிகைகளின் நோக்கம் – The Purpose of the Feasts

*-Betty*



பஸ்கா பண்டிகை மற்றும் இஸ்ரவேலர் தங்களுடைய பாவங்களுக்காகச் செலுத்த வேண்டியிருந்த மிருகபலி போன்றவற்றின் நோக்கத்தைக் கற்றுக்கொள்ள நாம் வேத வாக்கியங்களை உற்று நோக்கும் வேளையில், அவைகள் எகிப்திலிருந்து யாத்திராகமத்திற்கும் தேவனால் பரிசுத்தமடைவதற்கும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்ற நினைப்பூட்டுகிறவைகள் மாத்திரமல்ல என நாம் உணருகிறோம்; அவைகள் வரப்போகிற பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசு கிறிஸ்து என்பவரிலுள்ள பாவ-பலியையும் குறித்த தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயங்களாயிருந்தன. இன்று செய்யப்படுகிறதான கிறிஸ்துவின் மரணத்தின் நினைவு கூருதலாக சபைக்குக் கொடுக்கப்பட்ட அந்த நினைவு விருந்து பழைய ஏற்பாட்டின் விருந்தைப் போன்றதே ஆகும்: இது சிலுவைக்குக் கொண்டு சென்று அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கப்பண்ணுகிறது. “ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்” (1கொரி.11:26).

**கர்த்தருடைய பந்தியின் அறிமுகம்**

இந்தப் பந்தியின் ஆரம்பம் என்ன?

“வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, “பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்....” (லூக்.22:14-16,19,20).



முன்பதாக, இந்த நினைவு விருந்தைக் குறித்து ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், இயேசு இவ்வாறு சொல்லியிருந்தார்:

“நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்...... நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை..... என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்” (யோவா.6:51-54) என்றார்.

சிலர் இயேசு ஆவிக்குரிய உணவின் மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தாரென கருதலாம். உண்மையாகவே, ஜீவனுக்கான அப்பத்தைப் பற்றிய அவருடைய உரையாடல் அவருடைய போதனையின் ஆரம்பத்தில் அந்தப் பொருளைக் கொண்டிருந்தது. இதைப்போலவே யோவான்4:10-14-ல் சொல்லப்பட்ட வார்த்தைகளும் இந்த விவாதத்தில் ஜீவத் தண்ணீரென இயேசு அழைத்த ஆவிக்குரிய போஷாக்கைப்பற்றிய விஷயத்தோடு சம்பந்தப்படுகிறது. இந்த இரு பகுதிகளில் தாமே ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென சொல்லுவதில் அவர் அவைகளைத் தாமே மறைபொருளாக வைத்தார்.

இயேசு தம்முடைய சீஷர்கள் தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணவேண்டுமெனச் சொன்னார்.

ஆனால் இந்த உதாரணத்தில், இயேசு அப்பம் (தண்ணீர் இன்னும் மற்றவை) உருவணியாக வைக்கப்பட்ட இடத்தில் ஆவிக்குரிய உணவைப் பற்றிய கருத்திலிருந்து விலகி சொற்களுக்கு நேரடியான பொருளை உடையதாய் இருக்கக் கூடாததும் பிரத்தியேகமாக சொற்களின் வடிவமாகக் கருதக் கூடாததுமான வசனப் போக்கிற்குத் திரும்பினார். அவர் **தம்முடைய சீஷர்கள் ஜீவனைப் பெற்றிருக்க தம்முடைய மாம்சத்தைப் புசித்து தம்முடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டுமென** சொன்னார். ஏனென்றால் கவனித்துக் கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளமுடியாத இப்பேர்பட்ட **சூசகமான** ஆழமான கூற்றிற்கு மறைபொருளாகவுங்கூட ஒப்பானதொன்றுமில்லை, மேலும் “.....அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்” (யோவா.6:66).

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கப்புறம், சிலுவையில் பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தின் வாராந்திர நினைவுகூருதல்களை இன்றைய உலகில் வாழ்கின்ற விசுவாசிகள் அவருடைய கூற்றினைக் தோற்றத்தில் கண்டு அவர் சொல்லிய முழுக் கருத்தினையும் சரியாக புரிந்து கொள்ளமுடியும். **அவர் தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலாகயிருப்பவற்றை தொடங்கவிருக்கும் ஆவிக்குரிய விருந்தைக் குறித்த கருத்தினை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்** அந்த நிகழ்ச்சியின் போதும் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவிலும் அவர் **பங்கு கொள்ளவிருக்கிற தம்முடைய சரீரத்தைக்குறித்தும் இரத்தத்தைக்** குறித்தும் பேசினார். இந்த ஒத்த சொற்றொடர் நிதானமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.